வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்- மலர்விழி

தேதி 22.5.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

**ஆபரேஷன்** சிந்தூர் நடவடிக்கை மூலம், தீவிரவாதிகளின் மறைவிடங்களை அழித்து, இந்தியா, பாகிஸ்தானுக்கு சரியான பதிலடி கொடுத்திருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

**அம்ருத்** பாரத் **நிலையங்கள்** திட்டத்தின் கீழ் மறுமேம்பாடு செய்யப்பட்டுள்ள, 103 ரயில் நிலையங்களை, பிரதமர் இன்று, **பிகானேரில்** இருந்து, காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

**அம்ருத்** பாரத் நிலையமாக மேம்படுத்தப்பட்டுள்ள மாகே ரயில் நிலையத்தின் திறப்பு விழாவில் **துணை நிலை ஆளுநர்** திரு கைலாஷ்நாதன் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார்.

**ஆபரேஷன்** சிந்தூர் நடவடிக்கை தொடர்பான, 7 அனைத்து கட்சிக் குழுக்களில், திமுக எம்பி **திருமதி கனிமொழி** தலைமையிலான, 3-ஆவது குழுவினர், 5 நாடுகளுக்கு பயணம் தொடக்கி உள்ளனர்.

*மோடி-ராஜஸ்தான்-*

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம், தீவிரவாதிகளின் மறைவிடங்களை அழித்து, இந்தியா, பாகிஸ்தானுக்கு சரியான பதிலடி

கொடுத்திருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். முப்படைகளுக்கும் முழு சுதந்தரம் அளிக்கப்பட்டதால், முப்படையினர் பாகிஸ்தானை பொறிவைத்து பிடித்து மண்டியிட வைத்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

நேரடிப் போரில் பாகிஸ்தான் இந்தியாவை ஒருபோதும் வெல்ல முடியாது என்றும், இதன் காரணமாகவே அந்நாடு, தீவிரவாதத்தை ஊக்குவித்து **நிழல் யுத்தம்** நடத்துவதாகவும், பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று ராஜஸ்தான் மாநிலம் பிகானேரில், அரசு விழா ஒன்றில் பேசுகையில் கூறினார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை, தீவிரவாத எதிர்ப்புக்குப் புதிய கொள்கைகளை நிறுவி இருப்பதாகவும், இனி வரும் காலங்களில், ஒவ்வொரு தீவிரவாத தாக்குதலுக்கும், பாதுகாப்புப் படையினர் தீர்மானிக்கும் விதத்தில், சரியான பதிலடி கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். பாகிஸ்தானின் அணுஆயுத மிரட்டல்களுக்கு இந்தியா அஞ்சாது என பிரதமர் கூறினார். தீவிரவாதிகளுக்கான ஆதரவில், **அரசு ஆதரவு-அரசு அல்லாதோர் ஆதரவு** என பாகிஸ்தான் ஆடும் விளையாட்டு, இனி செல்லுபடியாகாது எனக் குறிப்பிட்ட அவர், தீவிரவாதிகளையும், அவர்களின் எஜமானர்களையும், இந்தியா, ஒன்றாகவே கருதும் என்றார்.

இந்தியர்களின் ரத்தத்துடன் விளையாடியதற்கு, பாகிஸ்தான் பெரிய விலை கொடுக்க நேரும் என்று திரு நரேந்திர மோடி கூறினார். இந்தியாவிற்கு உரிய நீர், இனி பாகிஸ்தானுக்கு கிடைக்காது என்றும் பாகிஸ்தானுடன் வர்த்தகமோ, அல்லது, PoK அல்லாத இதர பிரச்சனைகளில், பேச்சு வார்த்தைகளோ இராது என்றும் அவர் தெரிவித்தார். விழா குறித்து கூடுதல் விவரங்கள்..........

**(வாய்ஸ்)**

*மோடி-ராஜஸ்தான்*

**(வாய்ஸ்)**

பிகானேர் விழாவின் போது பிரதமர் திரு நரேந்திர மோடி மொத்தம் 26 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். 18 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 86 மாவட்டங்களில் அம்ருத் பாரத் நிலையங்கள் திட்டத்தின் கீழ் மறுமேம்பாடு செய்யப்பட்டுள்ள 103 ரயில் நிலையங்களையும் காணொளி காட்சி மூலம் அவர் திறந்து வைத்தார். பிகானேர்-மும்பை எக்ஸ்பிரஸ் ரயிலையும் பிரதமர் கொடி அசைத்து தொடக்கி வைத்தார்.

நாட்டில் வலுவான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க கடந்த 11 ஆண்டுகளில் அரசு, பல்வேறு முன் முயற்சிகளை எடுத்திருப்பதாக, அவர் தமது உரையில் கூறினார். அம்ருத் பாரத், நமோ பாரத், மற்றும், வந்தே பாரத் ரயில்கள், தேசிய அளவிலான வளர்ச்சி வேகத்தின் பிரதிபலிப்பாகவே அமைந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார். மொத்தம் ஆயிரத்து 300 ரயில் நிலையங்களை, அம்ருத் பாரத் நிலையங்களாக, அரசு மேம்படுத்தி வருவதாகவும், இதனால் வர்த்தகம், சுற்றுலா மற்றும் தொழில் மயம் அதிகரித்து, மக்களின் வாழ்க்கை எளிதாகும் என்றும் பிரதமர் தெரிவித்தார். ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இவ்விழாவில் பேசுகையில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில், ரயில்வே துறை புரட்சிகரமான மாற்றங்களை சந்திப்பதாக கூறினார். கடந்த 11 ஆண்டுகளில் மொத்தம் 34 ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்கு, புதிய ரயில் பாதைகள் அமைக்கப் பட்டுள்ளதாகவும், விடுதலைக்கு பின்னர் தற்போது தான், சிறிய ரயில் நிலையங்களின் மீது சிறப்பு கவனம் செலுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். 2027-ஆம் ஆண்டிற்குள், 500 நிலையங்கள், மறுமேம்பாடு செய்யப்படும் என அமைச்சர் மேலும் கூறினார்.

*மாஹே*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காணொளி காட்சி மூலம் திறந்து வைத்த, 103 அம்ருத் பாரத் நிலையங்களில், புதுச்சேரி யூனியன்

பிரதேசத்திற்கு உட்பட்ட, மாகே ரயில் நிலையமும் ஒன்றாகும். இதை ஒட்டி, மாகே ரயில் நிலையத்தில் இன்று காலை நடைபெற்ற விழாவில், புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். மாகே உட்பட அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு, அரசு அளித்து வரும் முக்கியத்துவத்தை, துணை நிலை ஆளுநர் எடுத்துக் கூறினார். மாஹேயில், ஜிப்மர் போன்ற மருத்துவ நிறுவனம் அமைப்பது குறித்து, பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மாஹே தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு ரமேஷ் பரம்பத், புகழ்பெற்ற மலையாள எழுத்தாளர் எம் முகுந்தன், மாஹே மண்டல நிர்வாக அதிகாரி திரு மோகன்குமார், கூடுதல் ரயில்வே கோட்ட மேலாளர் திரு ஜெய கிருஷ்ணன், மாகே நகராட்சி ஆணையர் திரு சத்யேந்திர சிங், ஆழியூர் பஞ்சாயத்து தலைவர் திருமதி ஆயிஷா உம்மர் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர். பிகானேரில் இருந்து பிரதமர் ஆற்றிய உரை, இவ்விழாவின் போது நேரடியாக ஒளிபரப்பப் பட்டது. **அம்ருத் பாரத் நிலையங்கள் திட்டத்தின்** கீழ் மாகே ரயில் நிலையத்தில் பயணிகளுக்கான பல்வேறு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. புதிய காத்திருப்போர் கூடம், நவீன கழிவறைக் கட்டிடம், மேம்படுத்திய நடைமேடைக் கூரை, புதிய முக மண்டபம், இரண்டாவது நுழைவு வாயில், இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு பிரத்யேக பார்க்கிங் பகுதி உள்ளிட்ட வசதிகள் இதில் அடங்கும்.

*அனைத்துக் கட்சி குழு*

**ஆபரேஷன்** சிந்தூர் நடவடிக்கை பற்றிய, இந்தியாவின் **தூதரகப் புறவீச்சு** முயற்சிகளின் கீழ், அரசால் அமைக்கப்பட்டுள்ள, 7 அனைத்து கட்சிப் பிரதிநிதிக் குழுக்களில், திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி தலைமையிலான 3-ஆவது குழுவினர், இன்று முதல், ஸ்பெயின், கிரீஸ், ஸ்லோவீனியா, லட்வியா, ரஷ்யா ஆகிய 5

நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர். பயணம் தொடங்கும் முன்பாக திருமதி கனிமொழி செய்தியாளர்களிடம் பேசுகையில், தீவிரவாதத்தால் இந்தியாவில் பல உயிர்கள் பலியாகி இருப்பதையும், இத்தகைய நிலையில் எந்த ஒரு நாடும் சும்மா இருக்க முடியாது என்பதையும். உலகிற்கு எடுத்துக் கூறுவதே இப்பயணத்தின் நோக்கம் என்றார். இதே நோக்கத்துடன்,மொத்தம் 7 அனைத்துக் கட்சிக் குழுக்களை, மத்திய அரசு, மொத்தம் 32 நாடுகளுக்கு அனுப்புகிறது.

*பரம்வீர் சக்ரா*

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்தியப் படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. இந்தியப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு, சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில், பரம்வீர் சக்ரா விருது பெற்ற **மேஜர் ஹோஷியார் சிங்** குறித்து ஒரு தொகுப்பு .............

**(வாய்ஸ்)**

*பரம்வீர் சக்ரா* **(வாய்ஸ்)**

அரியானா மாநிலம் ரோஹ்தக் மாவட்டத்தில் பிறந்தவரான மேஜர் ஹோஷியார் சிங், 1963-ஆம் ஆண்டு ஜுன் மாதம், 3-ஆவது கிரெனேடியர் படைப் பிரிவில் சேர்க்கப்பட்டவர் ஆவார். 1971-ஆம் ஆண்டு இந்தோ-பாக் போரின் போது, பசந்தர் ஆற்றுக்கு அப்பால், ஆழமான நிலக்கண்ணி வயல்களுக்கு இடையே அமைந்திருந்த எதிரிப் பிராந்தியத்தில், இந்தியப் படைகள் காலூன்றித் தாக்குவதற்கு ஏற்ற பாதுகாப்புப் பகுதி ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு, 3-ஆவது கிரெனேடியர் படைப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது.இதற்கென, ஜர்ப்பால் என்ற இடத்தை கைப்பற்ற அனுப்பப்பட்ட சி-கம்பெனி என்னும் இந்தியப் படைக் குழுவின் தலைவராக மேஜர் ஹோஷியார் சிங் இருந்தார். எதிரிப் படைகளின் குண்டு மழைக்கு ஆளான நிலையிலும்,

ஹோஷியார் சிங் தமது வீரர்களை அயராது முன் அழைத்துச் சென்றதில், இருதரப்பினருக்கும் இடையே, நேருக்கு நேர் சண்டை மூண்டது. எதிரிப் படையினரின் பீரங்கித் தாக்குதலை மீறி, ஹோஷியார் சிங், எதிரிப் படைகளின் அகழிகளுக்கு இடையே துணிச்சலாக உட்புகுந்த விதத்தினால், சக வீரர்கள் பேரூக்கம் பெற்று, எல்லாத் தடைகளையும் முறியடித்ததுடன், எதிரிகளுக்கு, ஏராளமான இழப்புகளையும் ஏற்படுத்தினர்.

1971-ஆம் ஆண்டு டிசம்பர் 17-ஆம் தேதி எதிரிப் படையினர் பீரங்கிகள் மூலமான குண்டு மழையின் ஆதரவுடன், மற்றொரு தாக்குதலில் ஈடுபட்ட போது, எதிரிப் படைகளின் குண்டு ஒன்று, இயந்திர துப்பாக்கி நிலை ஒன்றின் மீது விழுந்து வெடித்ததில், அங்கிருந்த இந்தியப் படையினர் காயமடைந்தனர். ஹோஷியார் சிங் நிலைமையின் தீவிரத்தை உடனடியாக உணர்ந்து, மோசமாக காயமடைந்திருந்த நிலையிலும், இயந்திர துப்பாக்கியை தானே கையாண்டு, எதிரிப் படையினர் பலரை சுட்டு வீழ்த்தினார். இந்தியப் படைகளின் எதிர்த் தாக்குதலை சமாளிக்க முடியாமல், இறந்து போன தலைமை அதிகாரி உட்பட 85 பேரின் உடல்களை அப்படியே போட்டு விட்டு எதிரிப் படையினர் பின்வாங்கினர். கடமையை நிறைவேற்றுவதில் மேஜர் ஹோஷியார் சிங் வெளிப்படுத்திய அபார துணிச்சல் மற்றும் அயராத அர்ப்பணிப்பு உணர்வுக்காக, அவருக்கு பரம்வீர் சக்ரா விருது வழங்கப்பட்டது. மேஜர் ஹோஷியார் சிங்கின் வீரத்திற்கு, நாடு தலை வணங்குகிறது.

*சென்னை*

தமிழகத்தில், அம்ருத் பாரத் நிலையங்களாக மறுமேம்பாடு செய்யப்பட்டுள்ள, **சென்னை பரங்கிமலை**, ஸ்ரீரங்கம், விருத்தாச்சலம், சிதம்பரம், திருவண்ணாமலை உட்பட 9 ரயில் நிலையங்களையும், பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பிகானேரில் இருந்து காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். இதை ஒட்டி சென்னை பரங்கிமலை ரயில் நிலையத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய தகவல்-ஒலிபரப்புத்

துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் பேசுகையில் …………………

(வாய்ஸ்)

*வானிலை*

தென்மேற்கு பருவமழை, கேரளத்தில், அடுத்த 2-3 நாட்களில் தொடங்க வாய்ப்புகள் இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மத்திய கிழக்கு அரபிக் கடலில் இன்று காலை உருவாகி உள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி, அடுத்த 36 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என்றும், வரும் 27-ஆம் தேதி வாக்கில் மத்திய மேற்கு வங்க கடலில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகலாம் என்றும் வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், மேலும் சில நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. வரும் 24 முதல் 26-ஆம் தேதி வரை, கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. பலத்த சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகமுள்ள, தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், வங்க கடல் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

*ஐபிஎல்*

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு, அகமதாபாத்தில் நடைபெறும் போட்டியில், குஜராத்-லக்னோ அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு மும்பையில் நடைபெற்ற போட்டியில், மும்பை அணி, 59 ரன் வித்தியாசத்தில், டெல்லி அணிக்கு எதிராக வெற்றி பெற்று, பிளே-ஆஃப் சுற்றுக்கு தகுதி பெற்றது.

மீண்டும் ;தலைப்புச் செய்திகள்

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம், தீவிரவாதிகளின் மறைவிடங்களை அழித்து, இந்தியா, பாகிஸ்தானுக்கு சரியான பதிலடி கொடுத்திருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

அம்ருத் பாரத் நிலையங்கள் திட்டத்தின் கீழ் மறுமேம்பாடு செய்யப்பட்டுள்ள, 103 ரயில் நிலையங்களை, பிரதமர் இன்று, பிகானேரில் இருந்து, காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

அம்ருத் பாரத் நிலையமாக மேம்படுத்தப்பட்டுள்ள மாகே ரயில் நிலையத்தின் திறப்பு விழாவில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தொடர்பான, 7 அனைத்து கட்சிக் குழுக்களில், திமுக எம்பி திருமதி கனிமொழி தலைமையிலான, 3-ஆவது குழுவினர், 5 நாடுகளுக்கு பயணம் தொடக்கி உள்ளனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.
Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 22.5.2025/Script.

-----------------------------